உ

இன்றைய உலகிற்குக் குறிப்பாக மேலை நாடுகளுக்குச் சைவ சித்தாந்தம் எவ்வாறு பொருந்தும் ?

(THE RELEVANCE OF SAIVA SIDDHANTHA TO THE MODERN WORLD INCLUDING THE WEST)

(புலவர் மணி- சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார்
புதுக்கோட்டை)

நான்கு உரிமைகள்:-

"பேச்சுரிமை, கருத்துரிமை, எழுத்துரிமை, வழிபாட்டு உரிமை ஆகிய நான்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்புரிமையாகும். உலக நாடுகள் இந்த நான்கு உரிமைகளையும் எக்காலத்தும் பாதுகாப்பதாக உறுதி செய்து அறிவிக்க வேண்டும்" என்று முன்னாள் அமெரிக்க அதிபர் காலஞ்சென்ற திரு. ரூஸ்வெல்ட் அவர்கள் பல்லாண்டுகளுக்கு முன் வானொலி வாயிலாக உலக அரசுகள் அனைத்துக்கும் வேண்டுகோள் விடுத்தார். மக்களாட்சி உள்ள நாடுகள் இவ்வுரிமைகளைப் பாதுகாப்பதாகச் சொன்னாலும் சில சமயங்களில் அவசர காலப் பிரகடனத்தின் மூலம் இவற்றைத் தடை செய்து விடுகின்றன. குறுகிய காலத்திற்குக் கூட இவற்றில் ஒன்றையும் தடை செய்யக் கூடாதென்னும் கருத்தில்தான் திரு. ரூஸ்வெல்ட் "எக்காலத்தும்" என்னும் சொல்லைச் சேர்த்து அறிவித்தார். "ஒரு சில மணி நேரங்கள் ஒருவன் மூச்சு விடாமல் இருக்க வேண்டும் எனப் பிரகடனம் செய்தால் பொருத்தமாக இருக்குமா? அப்படித்தான் உயிர் உரிமைகளாகிய இவற்றை ஒரு சில காலத்துக்குத் தடை செய்வதும் பொருத்தமாகாது" என அவர் கருதியிருக்கிறார். பொதுவுடைமை நாடுகளில் இவ்வுரிமைகள் அறவே இல்லை. தனிப்பட்டவர் உணர்ச்சிகளைத் தடை செய்தால்தான் கட்டுக்கோப்புகள் குலையாமல் சமுதாய நோக்கிலுட

...ளாதார நோக்கிலும் நாடு முன்னேறும் என அவை கருதுகின்றன.
...வ சித்தாந்தம் இது பற்றி என்ன சொல்கிறது? என்பதைச் சிந்திப்போம்.

...ன்ம இயல்பு:- "ஆன்மாக்கள் எண்ணில" என்பது சைவ சித்தாந்தம். அவற்றை இறைவன் படைக்கவில்லை. அவை இறைவனைப் போல் அநாதி. அவை அநாதியாதலால் அவற்றின் அறிவு, இச்சை செயல்களும் அநாதி. இறைவனின் அறிவு யாவற்றையும் ஒருங்கே அறியும் தன்மையது. உயிர்களின் அறிவு அறிவித்தால்தான் அறியும், இது மட்டுமன்றிப் படிமுறையாகப் பயிற்சி பெற்றுச் சிறுக சிறுகவே எதனையும் அறியும் தன்மையுடையது. இத்தன்மை ஆன்மாக்களுக்கு உள்ள பொதுவியல்பாகும். ஓரான்மா மற்றை ஆன்மாவினின்றும் வேறுபடுவதற்குக் காரணம் வேண்டும். பொதுவியல்பு ஒற்றுமைப்படுத்துமே அன்றி வேற்றுமைப் படுத்தாது. ஆன்மாக்கள் பல என்றால் அவை ஒவ்வொன்றும் வெவ்வேறாக இருந்தாக வேண்டும். இலக்கணம் வேறில் வழி இலக்கியம் பலவாதல் செல்லாது. எனவே "ஒவ்வோர் ஆன்மாவுக்கும் தனித்தன்மை உண்டு" என்பது சித்தாந்தம். அத்தனித்தன்மையின்படிதான் அது அறிவு, இச்சை செயல்களைப் பயன்படுத்தும். இதனாலேயே ஒவ்வொரு ஆன்மாவுக்கும் ஆணவமலப் பிணிப்பில் வேறு [illegible]கிறது. இவ்வேறுபாட்டாலேயே அவை ஒவ்வொன்றுக்கும் விருப்பு வெறுப்புகள் வேறுபடுகின்றன. இவ்வேறுபாட்டால் வினைகள் வேறுபடுகின்றன. வினை வேறுபாட்டால் பிறவிகள் வேறுபடுகின்றன. ஆன்மாக்கள் யாவும் ஒன்றெனப்படாமல் வேறெனச் சைவ சித்தாந்தம் கொள்வதற்குக் காரணம் இத்தனித்தன்மையே ஆகும். இதனைச் சிவஞான சுவாமிகள் சிவஞான பாடியத்தில் "சிறப்பியல்பு வேறுபாடு" எனக் குறிப்பிடுகிறார். ஆன்மாவுக்குத் தனித்தன்மை அநாதியே உள்ள இயல்பாதலால் அதனை எக்காலத்திலும் மாற்ற இயலாது. இக்காரணத்தாலேயே இறைவன் அந்தந்த ஆன்மாவின் இயல்புப்படி செயலாற்றத் துணை செய்கிறான். தனித்தன்மைச் செயற்பாட்டிற்குரிய வாய்ப்புக்களை இறைவன் உலகிடைப் படைத்து

[illegible] வழங்கியிருக்கிறான். "பல்வேறு வகையான சிறப்புக்கள், உருவ
அமைப்புக்கள், நிறங்கள், மொழிகள், சமயங்கள், உணவுகள், தட்பவெப்ப நிலைகள் ஆகிய
[illegible] இறைவன் படைத்தமைக்குக் காரணம் ஆன்மாக்களின் தனித்தன்மை
[illegible]த்தான்," எனச் சைவ சித்தாந்தம் கூறுகிறது. சமுதாயவாதிகளும்,
[illegible] ஆன்மாவின் தனித்தன்மைக்கு மாறாக "ஒரு வழிச் சிந்தனை"
[illegible] அது வெற்றி பெறாது. தீமையைச் செய்யாத ஒரு நிலையை இறைவ
ன் படைப்பில் அமைக்கவில்லை, ஆன்மாக்கள் தீமை செய்வதற்கும் அவன் துணை
புரிகின்றான். தீமையின் விளைவாகிய துன்பத்தை ஆன்மா அனுபவித்தே அறிவு விளக்கம்
பெறுகிறது. ஆன்மா தன் இயல்புக்கு ஏற்றபடி நன்மையையோ, தீமையையோ செய்
து இன்ப துன்பங்களை அனுபவித்துத் தன் இயல்புப்படி ஆணவமலப் பிடிப்பினின்றும்
மெல்ல மெல்ல விலகி முன்னேறும்படியாகவே இறைவன் உலகைப் படைத்திருக்கிற
ஆன்மாவின் இயற்கை இப்படி இருப்பதால் சமுதாயவாதிகள் அதன் தனித்தன்மை
செயல்படுவதற்கு நிறைய இடம் வைத்தே சமுதாயத் திட்டங்களையும் பொதுவாக
திட்டங்களையும் உருவாக்க வேண்டும். இல்லையேல் நாளடைவில் கிளர்ச்சிகள்
ஏற்பட்டு சமுதாயம் சிதைந்துவிடும். இறுகிய காலத்திற்குக் கூட ஆன்மாவின்
தனித்தன்மை உரிமைகளைத் தடை செய்யக்கூடாது. ஆன்மாக்கள் ஒன்றோடு
ஒன்று தொடர்புற்று வாழும்படியான ஓர் அமைப்பினையும் இறைவன் உலகப்
படைப்பில் உண்டாக்கியிருக்கிறான். இதனால் சமுதாய அறங்களும் கட்டுப்பாடுக
இன்றியமையாதன எனச் சைவ சித்தாந்தம் கருதுகிறது. ஆனால் ஒவ்வோர் ஆன்
மாவும் தனித்தனியே தான் மலநீக்கம் பெற்று முக்தி அடைய வேண்டியதிருப்பதா
ல் தனித்தன்மையே நிலையானதென்றும் சமுதாயத் தொடர்பு தாற்காலிகமானதென்
றும் சைவ சித்தாந்தம் கொள்கிறது. நிலையான தன்மைக்கு நிறைய இடமும் தாற்
காலிகமான தன்மைக்குக் குறைய இடமும் வகுப்பதே முறையாகும். இங்ஙன
மன்றிச் சமுதாயத்திற்கு முதலிடம் வகுத்துத் தனித்தன்மைக்குக் குறைந்த இட
மளித்தால் அந்த முயற்சி ஒரு போதும் வெற்றி பெறாது என்பது சைவம் கண்ட

[illegible]

உண்மையாகவும் பொதுவுடைமை நாடுகளில் சமுதாயத்திற்கு முதலிடம் வகுத்துத் தனிப்பட்டோர் உணர்ச்சியினை வெளிப்படுத்த விடாமல் அடக்குகின்றனர். காட்சி [illegible] கொள்கையும் [illegible] செல்ல அவர்கள் முயற்சி [illegible] இப்போது இல்லை. தனிப்பட்டோர் [illegible] நலத்திலிருந்த கட்டுப்பாடுகள் இப்போது இல்லை. தனிப்பட்டோர் உரிமைகள் [illegible] இன்று வழங்கப்பட்டுள்ளன. இதிலிருந்து தனிப்பட்டோர் உரிமைகளை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த இயலாது என்பது புலனாகும்.

புதிய உலகை உருவாக்க முயலும் [illegible] சைவ சித்தாந்தம் கூறும் இத்தனித்தன்மை உண்மைகளை மனத்தில் கொள்ள வேண்டும். சமுதாயக் கட்டுப்பாட்டைச் சைவம் "வேண்டாம்" எனக் கூறவில்லை, கூறவும் இயலாது. தனித்தன்மைக்கு நிறைய இடம் கொண்ட ஒரு சமுதாய அமைப்பினையே உருவாக்க வேண்டும் என [illegible] சொல்கிறது. மனித உரிமைக்குப் போராடும் பேரறிஞர்கள் பலர் மேல்நாடுகளிலும் அமெரிக்காவிலும் உள்ளனர். அவர்களுக்குச் சைவ சித்தாந்தம் சொல்லும் இக்கருத்து மிகவும் ஏற்புடையது என்பதைக் கூற வேண்டுவதில்லை.

<u>பொருளாதாரம்</u> :-

சைவ சித்தாந்தப் பொருளாதாரக் கொள்கை யாது? என வினவலாம். "வாழ்வென்னும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பி", என்ச் சிவஞான சித்தியார் கூறுகிறது. பெரும் செல்வம் வாழ்வில் மையலை விளைவிக்கும். அதனால் ஆன்ம முன்னேற்றம் தடைபடும். அதே போலத் துன்பமும் இழிவும் வறுமையால் வருமாதலால் ஆன்ம முயற்சி இன்றாம். நடுத்தரமான வளத்துடன் வாழ்தே ஆன்ம முன்னேற்றத்துக்கு ஏற்றது எனச் சைவ சித்தாந்தம் சொல்கிறது.

உடைமை அனைத்தையும் அரசாங்கத்துக்குச் சொந்தமாகும் பொழுது, அரசாங்கத்தை நிர்வகிப்போர் ஒரு குழுவாகவும் பொருள் உற்பத்தி செய்வோரும் நிறுவனங்களில் வேலைபார்க்கும் தொழிலாளர் மற்றொரு குழுவாகவும் அமைய வேண்டிய நிலை ஏற்படுகிறது. நிர்வகிப்போர் அதிகார பலம்

உடையவர்களாக விளங்குவது இயல்பு. இதனால் ஏழையோர் அவர்களுக்கு அடிமையே
வாழ வேண்டியதாகிறது. அச்சம் தனித்தன்மையைப் பெரிதும் பாதிக்கிறது.
சைவ சித்தாந்தம் தனித்தன்மையைப் பெரிதும் போற்றுவதால், இத்தகைய சமுதாய
அமைப்பை அஃது ஆதரிக்கவில்லை. அதற்காக முதலாளியர்க்க முறையில் எந்த
கட்டுப்பாடு இன்றி விட்டால் செல்வம் ஒரு பக்கம் குவிய வறுமை மறு
பக்கம் தாண்டவமாடும். இந்நிலையும் ஆன்மாவின் தனித்தன்மை முயற்சிக்குப்
[illegible] இடையூறாகும். புதிய விஞ்ஞான சாதனங்களால் மிகக் குறைந்த
நேரத்தில் ஏராளமான பொருட்களை இப்பொழுது உற்பத்தி செய்ய முடிகிறது.
விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்ட இவ்வுற்பத்திப் பெருக்கத்தைப் பொதுமையாக்கா-
விட்டால் வறுமை அதிகரிக்கவே செய்யும், மாக மிகப் பெரிய அளவில் உற்பத்தி செய்யும்
நிறுவனங்களை அரசாங்க உடைமை ஆக்குவதுதான் நியாயமாகும். ஏனை நிறுவனங்-
களைத் தனிப்பட்டோர் நடத்த அனுமதிக்க வேண்டும்; ஆனால் அந்த நிறுவனங்கள்
தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கும் வகையிலும் போதிய ஊதியம் கொடுக்கும்
வகையிலும் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும், மறைமுக வரிகளாலும், நேர்முக
வரிகளாலும் செல்வம் ஒரு பக்கம் குவிவதைத் தடுத்துப் பரவலாக்க வேண்டும்.
திட்டமிட்ட கலப்புப் பொருளாதார முறையின் மூலம் வறுமையை ஒழித்து உணவு,
உடை, வீடு, கல்வி, வேலை ஆகிய ஐந்தையும் ஒவ்வொருவருக்கும் அரசாங்கம்
உறுதி செய்ய வேண்டும். கலப்புப் பொருளாதார முறையில் சமுதாய நோக்கும்
உண்டு; தனிப்பட்டோர் நோக்கும் உண்டு; ஆன்மாவின் தனித்தன்மை கெடாமல்
சமுதாயத்தை உருவாக்குவதே சைவ சித்தாந்தக் கொள்கையாதலால் கலப்புப்
பொருளாதார முறையே சித்தியார் கூறும், "நடுத்தரப் பொருளாதார" வாழ்விற்கு
ஏற்றதாகும். இன்றைய அறிஞர் பலர் சைவ சித்தாந்தம் கூறும் கலப்புப்
பொருளாதார முறையைப் பலநாடுகளில் எடுத்துக்கூறி நடைமுறைக்குக்
கொண்டு வந்திருக்கின்றனர். அம்முறை வெற்றி பெறுவதையும் காண்கின்றோம்.
கலப்புப் பொருளாதார நாடுகள் வறுமையின்றி வளமாக இருப்பதையும் காண்கின்றோம்.

சைவ சித்தாந்தப் பொருளாதார முறை இஃதே என்பதை அந்த அறிஞர்கள் அறிவால் பெரியதோர் உலகை உடையவர் என்பதில் ஐயமில்லை. அவர்களுக்கு சைவ சித்தாந்த கூறும் இக்கருத்து மிகவும் துணை செய்யும் என்பது தெளிவு.

<u>நுகர் பொருட்கள் :- (மாயா மலம்)</u>

மனிதன் இன்று விஞ்ஞான அறிவின் துணைகொண்டு பல வகையான சுக போக சாதனங்களை உண்டாக்கியிருக்கிறான். தொலைக்காட்சிப் பெட்டிகள் "வீடியோக்கள்", "கம்ப்யூட்டர்கள்", வானொலிப் பெட்டிகள் இசை பொருத்தப்பெற்ற ஊர்தி வண்டிகள், குளிர்சாதன அறைகள், குளிர்சாதனப் பெட்டிகள், வண்ண வண்ண உடைகள் என ஏராளமான சுக போகப் பொருட்கள் மனிதனால் உண்டாக்கப் பெறுகின்றன.

சைவ சித்தாந்தம் மாயையிலிருந்து இவ்வுலகமும் உயிர்களின் உடல்களும் இறைவனால் உண்டாக்கப்பட்டன என்று சொல்கிறது. மாயையை அது சுத்த மாயை என்றும் அசுத்த மாயை என்றும் பிரகிருதி மாயை என்றும் மூன்றாகப் பகுக்கிறது. அசுத்த மாயையின் காரியம் பிரகிருதி மாயை என்றும் நாம் வாழும் இவ்வுலகம் பிரகிருதி மாயையைச் சார்ந்தது என்றும் கூறுகிறது. சுத்த மாயை ஆணவ மலத்தால் பாதிக்கப்படாமல் விளங்குவதால் மயக்கம் செய்யாதென்றும் அசுத்த மாயையும் பிரகிருதி மாயையும் ஆணவ மலத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால் மயக்கம் செய்யும் என்றும் ஆனால் மாயைக்குத் தன்னளவில் மயக்கம் செய்யும் தன்மை இல்லையென்றும் சைவ சாத்திரம் பேசுகிறது. பிரகிருதி மாயையில் உள்ள பொருட்கள் அனைத்தும் ஆணவமலக் கலப்புடையனவே ஆகும். ஆனால் சில பொருட்களில் இறைவனின் திருவருட் சக்தி கூடுதலாக விளங்குவதால் ஆணவமல சேட்டை குறைவாக இருக்கும். அப்படி விளங்குகின்ற பொருட்கள் சத்துவ குணமிக்கவை என்றும் ஏனையவை இராசத, தாமத குணங்கள் மிக்கவை என்றும் கூறப்படும். மனிதன் தன் முன்னேற்றத்திற்கும் உலகியல் இன்பத்திற்கும் சத்துவ குணம் மிக்க பொருட்களையே அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். இதற்குக் காட்டாக பயிர் பச்சைகள், காய்கறிகள், மலர்கள், வயற் புறங்கள், தோட்டங்கள், [illegible]

~~[illegible]~~ நாகரீகமான மனிதனுக்குச் சத்துவ குண உணர்ச்சியை உண்டாக்கும். இறைவனால் உருவாக்கப் பெறுமல் அவன் மறைந்து துணை செய்ய இருந்தும் மனிதனால் உருவாக்கப் பெறுகின்ற சுக போக சாதனங்கள் அனைத்தும் ஆணவமல மிகுதிப்பாடு உடையனவாதலால் அவை ~~[illegible]~~ இராசத, தாமத குணங்களை விளைவிக்குமே அல்லாமல் சத்துவ குணத்தை விளைவிக்க மாட்டா. விஞ்ஞான சுக போக சாதனங்கள் கவர்ச்சி-யாகவும், நாகரிகமாகவும் தோற்றம் அளிக்கும். ஆனால் அவை உடல் நலனுக்கும் மன நலனுக்கும் மிகப் பெரிய கேடுகளை விளைவிக்கும். சுக போக சாதனங்களை மிகுதியாகப் பயன்படுத்துகின்ற மேலைநாடுகளிலும் அமெரிக்காவிலும் மனநோயாளிகள் பெருகியிருக்கிறார்கள் எனப் புள்ளி விவரம் கூறுகிறது. சுக போக சாதனங்களால் பரபரப்பும் நெருக்கடியும் அதிகரிக்கின்றன. அவை மனித உறுப்புக்களை மிகவும் பாதிக்குமாதலால் இதய நோயாளிகள் இன்று உலகம் முழுவதும் கூடுதலாக இருப்பதைக் காண்கின்றோம். மருத்துவ அறிவினால் நீடித்து வாழ வகை கண்ட மனிதன் சுக போக சாதனங்களால் நடுத்தர வயதிலேயே இறந்து விடுகின்றான். மருத்துவ விஞ்ஞானம் சுக போக சாதனங்களைக் குறைவாக பயன்படுத்தும்படி சொல்கிறது. ஆனால் மக்கள் ஒரே மோகமாகச் சுக போக சாதனங்களைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். ஆணவமலப் பாதிப்பு இச்சாதனங்களால் அதிகரிக்கிறதெனச் சைவ சித்தாந்தம் கருதுவதால் "இயற்கையோடு இயைந்த வாழ்வினையே" இன்றைய மக்கள் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கூறுகிறது. இன்றைய உலகில் இவற்றை அறவே பயன்படுத்தாமல் இருக்க முடியாது; ஆனால் இவற்றில் மோகம் கொள்ளாமல் இயன்றளவு இவற்றைக் குறைவாகப் பயன்படுத்துவதே அறிவுடைமையாகும். மேல்நாட்டு அறிஞர்கள் பலர் இதனைக் கூறினாலும் மக்களுக்கு இச்சாதனங்களில் அதிக-மாக மோகமிருப்பதற்குரிய காரணத்தை அவர்கள் சொல்லவில்லை. ஆன்மா இயல்-பாகவே ஆணவமல பந்தத்திற்கு உட்பட்டது; இச்சுக போக சாதனங்களில் ஆணவ-மலக் கலப்பு அதிகமாக இருப்பதால் மக்கள் இவற்றில் மிகுதியும் மோகம் கொள்வதில் வியப்பில்லை என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

இக்காரணத்தை மேல்நாட்டு அறிஞர்கள் அறிந்து கொள்வதால் விளையும் பயன் என்ன? என வினவலாம். ஆணவமல மிகுதிப்பாக உள்ள சகலோக சாதனங்களில் அதிகமே ஆணவமல பக்குவம் உள்ள ஆன்மாக்கள் மோகம் கொள்வதும், அச்சாதனங்களை இறைவனைப் பயன்படுத்த வேண்டும் என்போரை ஏளனம் செய்வதும், எதிர்ப்பதும் இயல்பே என்பதை அறிந்து மனம் சோர்வுறாமல் அவர்கள் தம் கருத்துக்களை நாடு மக்களிடையே எடுத்துக் கூற வேண்டும். இக்காரணத்தை அறிந்து கொள்வதால் விளையும் பயன் இஃதே ஆகும்.

<u>நன்மலம் :-</u>

"இருவினை இன்பத் துன்பம்" என்பது சித்தியார் வாக்கு. நல்வினைக்கு இன்பமும் தீவினைக்குத் துன்பமும் வரும் என்பது இதன் கருத்து. ஆனால் இன்பம் என்பது யாது? துன்பம் என்பது யாது? என்பதைச் சைவ சித்தாந்தப்படி விளங்கிக் கொள்ள வேண்டும். சிவஞான பாடியத்தில் சாத்துவிக குண எழுச்சியோடு உலகப் பொருட்களை நுகரும் போதுதான் ~~உலகின் பொருள்கள்~~ அவை இன்பம் தரும் என்றும் இராசத, தாமத குண எழுச்சியோடு நுகரும் போது அவை துன்பம் தரும் என்றும் கூறப்பட்டுள்ளது. வினையை நல்வினை, தீவினை என இரண்டாகப் பகுத்தாலும் அநுபவத்தைச் சைவ சித்தாந்தம் மூன்றாகச் சொல்கிறது. சத்துவ குணத்தால் பெறுவது இன்ப அநுபவம் என்றும், இராசத குணத்தால் பெறுவது துன்ப அநுபவம் என்றும், தாமத குணத்தால் பெறுவது மோக அநுபவம் என்றும் அது சொல்கிறது. தாமத குணத்தால் உண்டாகும் மோகம் பின்னர் துன்பத்தை விளைவிக்கும். ~~[illegible]~~ எனவே மோகம், துன்பம் இரண்டையும் ஒன்றாக்கித் துன்பம் தீவினைப் பயன் என்றும் இன்பம் நல்வினைப் பயன் என்றும் சித்தாந்தம் தெளிவு செய்கிறது. அநுபவத்தை இன்பம், ~~மோகம்~~ துன்பம், ~~துன்பம்~~ மோகம் அதாவது சுக துக்க மோகம் எனத் திரிவிதமாகச் சித்தியார் [illegible] பேசுகிறது. கற்புடை மனையாளைச் சேர்வது இன்பம்; தாசியிடத்து அநுபவிப்பது மோகம்; அவ்வநுபவத்தால் வரும் நோய் துன்பம்; பால் உண்பது இன்பம்; மது உண்பது மோகம்; நஞ்சு உண்பது துன்பம்; உலகியலில் மக்கள் மோகத்தை ~~[illegible]~~ இன்பமாகத் தவறாகக் கருதி விடுகின்றனர்.

திருமண வாழ்வில் கணவனும் மனைவியும் இறுதி-காலம்வரை
வரை பிரியாத வாழ்வுதான் உண்மையானது, இன்பம். விவாகரத்துச் செய்வது,
திருமணத்திற்கு முன் கூடுவது, காதலித்தவரை விட்டு வேறொருவரைச் சேர்வது,
பரத்தையில் விழுவது, வரைவின் மகளிரிடத்தே செல்வது, மது உண்பது, போதை
மாத்திரைகள் சாப்பிடுவது முதலிய செயல்கள் தற்போது மேல் நாட்டிலும் அமெரிக்கா
விலும் அன்றாட நடைமுறை ஆகிவிட்டன. கீழை நாடுகளும் இவற்றைப் பின்பற்றத்
தொடங்கியிருக்கின்றன. இராசத, தாமத இன்ப எழுச்சி காரணமாக இவை அனைத்தும்
செய்யப்படுவதால் இவை மோகத்தையும் துன்பத்தையும் விளைவிக்குமே அல்லாமல்
இன்பத்தை விளைவிக்க மாட்டா. உண்மையான இன்பம் யாதென அறியாமல் இன்றைய
உலகம் மயக்கத்தில் மூழ்கி இருக்கிறது. மேலை நாடுகளிலும், அமெரிக்காவிலும்
இப்பாதுகாப்பு இல்லை. ஐந்தாறு ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்த பின் விவாகரத்துச்
செய்து கொண்டு வேறு ஆடவரையோ பெண்டிரையோ மணக்கின்றனர். இத்தகைய
மணமுறிவுகளால் குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். மணமுறிவு செய்துகொண்ட
பெற்றோர் வெவ்வேறு ஆடவரையோ பெண்டிரையோ மணப்பதால் முன்னைக் குழந்தை
களிடம் அன்பு காட்ட முடியாமல் போகிறது. அன்பை அறியாத குழந்தைகள் பெரியவர்
களானதும் ஒருவகை வெறுப்புணர்வு கொண்டு போதை மாத்திரைகளைச் சாப்பிடு-
கிறார்கள். மோகத்தை இன்பம் எனத் தவறாகக் கருதியதாலேயே இத்தகைய தொல்லை-
கள் உண்டாகியிருக்கின்றன. பெருஞ் செல்வ நாடான அமெரிக்காவில் வைத்தியம்
படித்தோரும் கொலை களவுகளைச் சர்வ சாதாரணமாகச் செய்வோரும் மிகுந்து
வருவதற்குக் காரணம் தூய்மையான இல்லற அமைப்பு இல்லாமையே ஆகும்.

சைவ சித்தாந்தம் இல்லறத்தை ஒரு தவமாகவே
கருதுகின்றது; புலன் இன்பத்தைச் சாத்துவிக முறையில் நுகர்ந்தால் நீடித்த
சுகத்தை அடைய முடியும்; இராசத, தாமத முறையில் நுகர்ந்தால் நரம்புத்
தளர்ச்சியையும் ஆண்மை இன்மையையும் அஃது உண்டாக்கிப் பின்னர் புலன்
இன்பத்தை நுகர முடியாமலேயே கெடுத்துவிடும். இதனாலேயே சாத்துவிக இன

இன்பந்தான் உண்மையான இன்பம் என்றும் ஏனையவை மோகமும் துன்பமும் என்றும் சித்தாந்தம் வரையறை செய்திருக்கிறது. ஒரே மனைவியுடன் நீடித்து வாழும் இல்லறத்தில் புலன் இன்பம் [illegible] ஆரோக்கியமான ஒழுங்கிலே [illegible]. பல்வேறு பெண்களுடன் மோகம் கொண்டு சேர்வோர் இன்பத்தின் நுட்பத்தை அறியாமல் நோய்வாய்ப் பட்டுத் துயரடைவர்.

இலண்டன் மாநகரில் தெருவுக்குத் தெரு பால் நுகர்வு உதவி ஆலோசனை நிலையங்கள் காணப்படுகின்றன. மோகத்தை அதிகரிக்கும் நடனங்கள், நடந்த வண்ணம் இருக்கின்றன. இளைஞர் பலர் இயற்கையான புலன் இன்பத்தை அனுபவிக்க முடியாமல் செயற்கைக் கருவிகளையும் வெறியூட்டும் மருந்துகளையும் பயன்படுத்தி அழிகின்றனர்; அமெரிக்காவில் அறுபது விழுக்காடு இல்லங்களில் மணமுறிவு நிகழ்கிறது.

சைவ சித்தாந்தம் நெறியோடு உலக இன்பத்தை அனுபவிப்பதில் தவறில்லை எனக் கொள்கிறது. பட்டினத்தார் பதினோராம் திருமுறையில், "அச்சொல் மாதர் ஆகம் தோய்ந்து. ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்து", வாழ்ந்தாலும் இறை நினைவுடன் இருந்தால் முக்தி பெறலாம் என்று சொல்கிறார். ஆகவே சைவ சித்தாந்தம் முறையுடன் அனுபவிக்கும் இல்லற இன்பத்தைத் தடை செய்யவில்லை என்பது புலனாகும். ஆங்கிலத்தில் "Lawful Pleasure' அதாவது நியாயமான இன்பம் என்றொரு சொற்றொடர் உண்டு; சைவ சித்தாந்தம் சாத்துவிக இன்பத்தை நியாயமான இன்பம் எனச் சொல்லவில்லை; அதுதான் உண்மையான இன்பம் என்று சொல்கிறது. மேல் நாட்டுச் சிந்தனையாளர்கள் சைவ சித்தாந்தம் கூறும் இந்நுட்பத்தை மனத்தில் கொள்ள வேண்டும்.

ஊழ்வினை :-

முன்னைப் பிறவிகளில் செய்த வினையின் பயன் இப்பிறப்பில் வந்து நுகர்ச்சியை ஊட்டுமாதலால் ஊழ்வினையைச் சைவ சித்தாந்தம் மிக உறுதியாக நம்புகிறது; ஆனால் 'எல்லாம் ஊழ்" என்பது சைவ சித்தாந்தமன்று

முயற்சி வேறு; ஊழ் வேறு; முயற்சி நம் விருப்பு வெறுப்பின் காரணமாக நிகழ்வது; ஊழ் முன்னை வினைப் பயனாக வருவது. நம் விருப்பு வெறுப்பினை ஊழ்வினைப் பயன் பாதிக்குமாதலால் முயற்சியில் ஊக்கம், சோர்வு ஆகியவை உண்டாகும் எனத் திருக்குறள் கூறுகிறது. முயற்சியில் ஊக்கம், சோர்வு ஆகியவை உண்டாயினும் முயலும் உரிமை ஆன்மாவுக்கு என்றும் உண்டு.

"பொறியின்மை யார்க்கும் பழி அன்று; அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி"

என்னும் குறளில், "ஊழ் இல்லாமை பழி அன்று; முயற்சி இல்லாமைதான் பழி" என வள்ளுவர் கூறியிருக்கிறார். இதிலிருந்து முயற்சி வேறு; ஊழ் வேறு என்பது இனிது புலனாகும். "ஊழையும் உப்பக்கம் காணலாம்" என அவர் கூறியிருப்பதற்குக் காரணம், "முயற்சி வேறு, ஊழ் வேறு" என அவர் கொண்டமையே ஆகும். சிவஞான போதம் பத்தாம் சூத்திர உரையில் சிவஞான சுவாமிகள், "ஆன்மா மிக முனைந்து ஒரு முயற்சியைச் செய்யுமானால் அம்முயற்சிக்கு இறைவன் உடனே பயன் வழங்குவான்" என்று கூறுகிறார். ஆகவே தீவிரமான முயற்சியை நாம் மேற்கொண்டால் இறைவன் ஊழ்வினைப் பயனை நிறுத்தி இம்மையிலேயே பயன் வழங்குவான் என்பது தெளிவு.

ஊழ் மிகக் கடுமையானது என்று உடன்படுகின்ற சைவ சித்தாந்தம் தீவிரமான முயற்சியின் வாயிலாக அதனை வெல்லலாம் எனச் சொல்வதை அறிஞர்கள் கவனிக்க வேண்டும். இன்றைய இளைஞர்கள் தீவிரமாக உலகியலிலோ ஆன்மீகத்திலோ முயன்றால் குறித்த பயன் கிட்டும் என்பது சைவ சித்தாந்தக் கொள்கையாகும்.

விஞ்ஞான அறிவின் துணை கொண்டு முயற்சியின் வன்மையால் புதிய புதிய கருவிகளையும் உண்மைகளையும் கண்டு பிடிப்பதைச் சைவ சித்தாந்தம் வரவேற்கிறது; பாராட்டுகிறது; ஊக்குவிக்கிறது; ஆனால் விஞ்ஞான உண்மைகளை [illegible] ஆன்மீக உண்மைகளோடு இணைத்துச் செந்நெறியில் ~~வாழ்ந்தால்தான்~~ பயன்படுத்தினால் மனித குலம் அமைதியாகவும் இன்பமாகவும் ~~வாழ~~ திகழ முடியும் என அது கூறுகிறது.

ஆணவமலம் :-

ஆணவமலம் பற்றிய ஓர் உண்மையைச் சைவசித்தாந்தம் தெளிவு
செய்திருக்கிறது. நாம் செய்வது பிழையென மனச்சாட்சி சொன்னாலும் சரியென
ம் நினைக்கிறோம். விபரீத உணர்வை ஆணவமல மறைப்பு உண்டாக்குமென்றும்
ணவமல மறைப்பு. சிறிது விலகிய பின்னர்தான் நாம் செய்தது பிழையெனத்
தெளிவாக உணர்வோமென்றும் சைவ சித்தாந்தம் சொல்கிறது.

உலக வல்லரசுகள் ஏவுகணைகளையும் பயங்கரமான ஆயுதங்-
களையும் செய்து குவித்துக் கொண்டிருக்கின்றன. உலகை அணு பஸ்மாசமாக்குமென்பது
ந்த வல்லரசுகளுக்கு நன்கு தெரியும். எனினும் தாம் செய்வதுதான் சரியென
னவை கருதி ஆயுத உற்பத்திப் போட்டியில் இறங்கி இருக்கின்றன. இஃது
ஆணவமல மறைப்பின் விளைவாகும். மேல் நாட்டிலும், அமெரிக்காவிலும் ஆணவமலம்
நீங்கப்பெற்ற பெரியோர்கள் பலர் உளர். அவர்கள் இம்மல மறைப்பால் உலகிற்கு
விளையும் தீங்கினை எடுத்துக் காட்டி ஆயுத உற்பத்திப் போட்டியை உடனடியாக
நிறுத்தியாக வேண்டும். கொலையைவிட மிகப் பெரியதொரு பாவம் இல்லையென
லாச் சமயங்களும் ஒப்புக் கொள்கின்றன. சைவ சித்தாந்தம் அஃறிணை உயிர்-
களைக் கொல்வதும் பெரும் பாவம் எனக் கொண்டே புலால் உண்ணாமையை
யுறுத்துகிறது. இந்நிலையில் மனிதவர்க்கமே இல்லாமல் அழிந்துவிடக்கூடிய
தங்களை உற்பத்தி செய்வது எவ்வளவு பாவம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

விஞ்ஞானப் பெருமகனாகிய "ஐன்ஸ்டின்" பின் வருமாறு
ல்லியிருப்பது நினைவு கூரத்தக்கது :-

"மூன்றாவது உலகப் போரில் என்னென்ன ஆயுதங்களைப் பய
வார்கள் என்பது எனக்குத் தெரியாது, ஆனால் நான்காவது உலகப் போரில்
ம் அம்பும் ஆயுதமாக இருக்கும் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்".

~~ஐன்~~ ஐன்ஸ்டின் மூன்றாவது உலகப் போரில் மனித நாகரிக
ம் அழிந்துவிடும் என்பதையே இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

சைவ சித்தாந்தம் ஆணவமலச் செயற்பாடுகள் பல்வேறு வகையாக இருக்கும் எனச் சொல்வதால் வல்லரசுகள் எத்தனை அழகான நியாயங்களைச் சொன்னாலும் அந்த நியாயங்கள் ஆணவமலத்தின் பாற்பட்டவை என்பதை உணர்ந்து மேல் நாட்டு அறிஞர்கள் இந்தப் பயங்கர நிலையை ஒழிப்பதில் மிக முனைந்து செயல்பட வேண்டும்.

<u>இறை உண்மை:-</u>

உலகில் பொருட்கள் தோன்றுகின்றன; அழிகின்றன; தோற்றமும் அழிவும் இயற்கையில் அமைந்து கிடக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். தோற்றுவிக்கும் ஆற்றலும் அழிப்பிக்கும் ஆற்றலும் சம வலிவுடன் இருந்தால் ஒரு பொருளும் தோன்ற முடியாது. தோற்றுவிக்கும் ஆற்றல் கூடுதலான வலிவுடன் இருந்தால் பொருட்களை அழியவிடாது; அழிப்பிக்கும் ஆற்றல் கூடுதலான வலிவுடன் இருந்தால் தோற்றுவிக்கும் ஆற்றலைச் செயல்பட விடாது. ஆனால் உலகிடை இரண்டும் நடைபெறக் காண்கின்றோம். அறிவற்ற இயற்கை தன் ஆற்றல்களை இருந்தபடியேதான் வெளிப்படுத்தும். ஒன்று இயங்கும் போது மற்றொன்றை அடக்கி வைக்க அதற்குத் தெரியாது. ஆகவே இவ்வாற்றல்களை அடக்கியும் விடுத்தும் செயல்படுத்த வேறோர் ஆற்றல் இருந்தாக வேண்டும். அப்பொழுதுதான் உலகில் பொருட்கள் தோன்றவும், அழியவும் இயலும். அந்த ஆற்றல் அறிவற்றதாக இருந்தால் அதற்கும் வகுத்துச் செயலாற்றத் தெரியாது. எனவே தோன்றுதல், அழிதல் ஆகிய செயல்களை வகுத்துச் செயல்படும்படி இயற்கையை இயக்குவதற்கு அறிவுள்ள ஓர் ஆற்றல் இருந்தாக வேண்டும். அந்த ஆற்றல் பேரறிவு படைத்ததாயும் வியாபகம் உடையதாயும் என்றும் உள்ளதாயும் இருந்தால்தான் என்றும் உள்ள இயற்கையைச் செயல்படுத்த இயலும். பல்வேறு குணங்கள் அந்த ஆற்றலுக்கு இருக்க வேண்டுமாதலால் அதனைச் முதன்மையான சக்தி, "கடவுள்" ~~"கடவுள் பொருள்"~~ எனச் சித்தாந்தம் நிலைநாட்டுகின்றது ~~தெளிவு செய்கின்றது~~. அந்தப் பொருளுக்கு எந்தத் தேவையும் இல்லையாதலால் உயிரையோ உலகிற்கு மூலமாகிய மாயையையோ, உயிரின் அறிவை மறைக்கும் ஆணவ மலத்தையோ

அது படைத்திருக்கமாட்டாது என்றும், ஆகவே உயிர், ஆணவம், மாயை, [illegible] உயிர் மலத்தைப் பற்றியதாகிய கன்மம் ஆகிய அனைத்தும் அநாதி என்றும் சைவ சித்தாந்தம் ~~கூறுகிறது~~ சொல்கிறது.

அநாதியே மலமறைப்புக்குள்ளாகிய உயிரை உய்விக்க வேண்டியே படிமுறையாகப் பயிற்சி பெறும் தன்மை உடைய அதற்கு உலகையும் உடலையும் [illegible] படைத்தளித்திருக்கிறான். எந்தத் தேவையும் இல்லாத இறைவன் இவ்வாறு [illegible] ~~செயல் செய்வதை~~ நோக்கும்போது அவன் பெருங்கருணையாளன் என்பது புலனாகிறது. [illegible]

இறைவன் கருணையாளனாதலால் தன் நிலையில் அவன் அருவம், உருவம் ஆகிய இரண்டையும் கடந்தவனாக இருப்பினும் உயிர்கள் தன்னை வழிபட்டு உய்ய அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று திருமேனிகளையும் தன் ஆற்றலால் கொள்கிறான் எனச் சைவ சித்தாந்தம் கூறுகிறது.

அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூன்று திருமேனிகளும் [illegible] நிகரானவே எனச் சித்தியார் உரையில் சிவஞான சுவாமிகள் சொல்கிறார். உருவத்தை விட அருவம் சிறந்ததென மேல்நாட்டில் பலர் கருதுகின்றனர். அது தவறு என்பது சுவாமிகள் வாக்கால் புலனாகும்.

பத்தி பெருகுவதற்கு உருவத்திருமேனிதான் மிகவும் ஏற்புடைத்து. அப்பர் சுவாமிகள் உருவத்திருமேனியைக் காண மீண்டும் பிறக்க வேண்டு[illegible]மனைக் கேட்பதிலிருந்து இத்திருமேனியின் சிறப்பு இனிது விளங்கும்.

ஏசுநாதரைக் கடவுளின் கூறாகவே கிறித்தவர்கள் கொள்வதால் மேல்நாட்டினரும் அமைதிக்கரும் அவர் திருமேனியைத் தியானம் செய்யலாம். [illegible]ளித்தியானம், வெட்டவெளித்தியானம், எண்ணமற்ற தியானம், அருவத்தியானம், [illegible]ள்ளிகளையும், பொருட்களையும், இயற்கைக் காட்சிகளையும் வைத்துச் செய்யும் தியானம் ஆகியவை சில சமயங்களில் கடவுள் உணர்வை மறப்பித்துச் சட சமாதிக்கு இட்டுச் செல்லும்; [illegible] இறைவனின் உருவத்திருமேனி ~~தியானம்~~ [illegible] தான் உண்மையான பத்தியை உண்டாக்கும். [illegible]

அது படைக்கமாட்டாது என்றும், ஆகவே உயிர், ஆணவம், மாயை, அநாதியே ஆணவ மலத்தைப் பற்றியதாகிய கன்மம் ஆகிய அனைத்தும் அநாதி என்றும் சைவ சித்தாந்தம் கூறுகிறது.

அநாதியே மலமறைப்புக்குள்ளாகிய உயிரை உய்விக்க வேண்டியே, [illegible] செயலைப் பயிற்சி பெறும் தன்மை உடைய அதற்கு உலகையும் உடலையும் படைத்தளிக்கிறான். எந்தத் தேவையும் இல்லாத இறைவன் இவ்வாறு [illegible] நோக்கும்போது அவன் பெருங்கருணையாளன் என்பது புலனாகிறது. [illegible]

இறைவன் கருணையாளனாதலால் தன் நிலையில் அருவம், உருவம் ஆகிய இரண்டையும் கடந்தவனாக இருப்பினும் உயிர்கள் தன்னை வழிபட்டு உய்ய அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று திருமேனிகளையும் தன் ஆற்றலால் கொள்கிறான் என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூன்று திருமேனிகளும் [illegible] சித்தியார் உரையில் சிவஞான சுவாமிகள் சொல்கிறார். உருவத்தை [illegible] மேல்நாட்டில் பலர் கருதுகின்றனர். அது தவறு என்பது சமயிகள் வாக்கால் புலனாகும்.

பத்தி பெறுவதற்கு உருவத்திருமேனிதான் மிகவும் ஏற்புடைத்து. அப்பர் சுவாமிகள் உருவத்திருமேனியைக் காண மீண்டும் பிறக்க வேண்டுமெனக் கேட்பதிலிருந்து இத்திருமேனியின் சிறப்பு இனிது விளங்கும்.

ஏசுநாதரைக் கடவுளின் கூறாகவே கிறித்தவர்கள் கொள்வதால் மேல்நாட்டினரும் அமெரிக்கரும் அவர் திருமேனியைத் தியானம் செய்யலாம். ஒளித்தியானம், வெட்டவெளித்தியானம், எண்ணமற்ற தியானம், அருவத்தியானம், புள்ளிகளையும், பொருட்களையும், இயற்கைக் காட்சிகளையும் வைத்துச் செய்யும் தியானம் ஆகியவை சில சமயங்களில் கடவுள் உணர்வை மறப்பித்துச் சட சமாதிக்கு இட்டுச் செல்லும். [illegible] இறைவனின் உருவத்திருமேனி [illegible] தான் உண்மையான பத்தியை உண்டாக்கும். [illegible]

நமக்கு மேலே ஒரு பரம்பொருள் உண்டென்ற திடமான நம்பிக்கை இருந்தால்தான் பத்தி தோன்றும்; "நாமே பிரமம்" என்னும் சங்கரர் வேதாந்தம் உண்மையான பத்தியை உண்டாக்க இயலாது. ஒழுக்கத்தை மட்டும் வற்புறுத்தும் சமண, பௌத்த மதங்கள் பத்தியைத் தோற்றுவிக்கமாட்டா.

கிறித்துவ சமயம் பத்திச் சமயம்தான். கணக்குத் தீர்க்கும் நாளில் (Judgement Day) திருந்தாத உயிர்கள் மீளா நரகத்தில் தள்ளப்படும் என அது சொல்வது கடவுளின் கருணைக்கு இழுக்காகும். கடவுளின் கருணையில் குறை இருந்தால் நம் பத்தியிலும் குறை உண்டாகும். "கடவுள் முழுக் கருணை உடையவர்; நாம் எவ்வளவு பாவியாக இருந்தாலும் நம்மைத் திருத்தி ஒரு காலத்தில் முத்தியை நிச்சயம் வழங்குவார்" எனச் சைவ சித்தாந்தம் சொல்கிறது. கடவுளிடத்தில் முழுப்பத்தி உண்டாவதற்கு இக்கருத்தே சிறப்புடையதாகும்.

மேல் நாட்டினரும் அமெரிக்கரும் உருவத் தியானத்தை மேற்கொண்டு பத்தி வழி நிற்பாராகில் அவர்களின் பர. பரப்பான வாழ்க்கையில் மன அமைதியும் இன்பமும் உண்டாகும்; பத்தி நெறி சாத்துவிக குண விளக்கத்தைத் தந்து தூய்மையான - அன்பு நிறைந்த இல்வாழ்க்கையை நடத்த வழி செய்யும்; கணவன் - மனைவியரிடையே மணமுறிவு நிகழாமல் தடுக்கும். பத்தி முதிர்வில் இறைவனே குருநாதனாக வந்து வியாபக நிலையை உணர்த்தி முத்திப் பேற்றைத் தருவான். ஒழுக்கம் நிறைந்த இல்வாழ்க்கையும் பத்தி மிக்க வழிபாடும் நாளடைவில் பற்றற்ற நிலையைத் தந்து இறைவன் ஒருவனையே பற்றி நிற்கிற முத்தி நிலையை அடைவிக்கும்.

சைவ சித்தாந்தம் பத்தி ஒன்றினால்தான் இறைவனை அடையலாம் என்கிறது. "அயரா அன்பின் அரன் கழல் செலுமே" என்பது சிவஞான போத வாக்கு. 'அன்பரால் அன்றி யாவர்க்கும் அறிவொண்ணா மலர்ச் சோதியான்" என்பது மணிவாசகர்; "ஞானம் ஈசன் பால் அன்பே" என்பது சேக்கிழார் அருள்மொழி.

[illegible]

கண்ணன் கீதையில், பக்தியால் தன்னை அடையலாம் என்றும், அஃதே எளிய வழி என்றும், ஆனால் பக்தியின்றி ஞானம், யோகம் முதலியவற்றாலும் தன்னை அடைய முடியும் என்றும், அவை கடினமான வழி என்றும் கூறுகிறான். இதிலிருந்து எந்த வழிகளாலும் தன்னை அடையலாம் என்பதை அவன் உடன்படுகின்றான் என்பது புலனாகும். பக்தி ஒன்றால் தான் தன்னை அடையலாம் என அவன் அடித்துச் சொல்லவில்லை. மணிவாசகரோ "அன்பரால் அன்றி யாவர்க்கும் அறியொண்ணா மலர்ச் சோதியான்" என்று அழுத்திச் சொல்வதன் வாயிலாகப் பக்தி ஒன்றினால்தான் இறைவனை அடையலாம் என்பதைத் தெளிவு செய்கிறார்.

மேல் நாட்டுக்கும் பொதுவாக இன்றைய உலகிற்கும் மிக வேண்டுவது அன்பே ஆகும்; அன்பு ஒன்றினால்தான் விஞ்ஞானம் கண்டு பிடித்திருக்கும் பயங்கரமான ஆயுதங்களிலிருந்து நாம் தப்பலாம். சைவ சித்தாந்தம் வலியுறுத்தும் பக்தி நெறி இந்த அன்பினை உலகெங்கும் தோற்றுவிக்கும் ஆற்றல் உடையதாகும். ஆகவே பக்தி நெறி தழைத்தோங்க உலக முழுதும் உள்ள அறிஞர்களும் அன்பர்களும் முயல வேண்டும்.

— X —